மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 317/23 |
| பெயர் | : | பெருமாள்சாமி (PW1) |
| த/பெ. | : | பரமசிவன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Kuttiraj is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of February 2025

**முதல் விசாரணை**

1)நான் ஜம்புலிங்கபுரத்தில் வசிக்கிறேன்.நான் விவசாயம் செய்கிறேன்.சாட்சி விஜயா என் மனைவி.சாட்சி அஸ்வின் என் மகளின் மகன் , என் பேரன்.ஆஜர் எதிரி குட்டிராஜை தெரியும் அவர் என் பக்கத்து வீட்டுக்காரர்.

2)சம்பவம் நடந்த அன்று நான் வீட்டில் இல்லை .நான் வெளியூர் சென்றிருந்தேன்.20.09.2022 அன்று மாலை 6.40 மணிக்கு என் மகள் கீதா எனக்கு போன் செய்து ஆஜர் எதிரி குட்டிராஜ் அவரது மகளை என் பேரன் மொட்டை மாடியில் விளையாடி கொண்டிருக்கும்போது எட்டிப்பார்த்தாக சொல்லி என் பேரனை திட்டியுள்ளார்,என் மனைவி எதிரியிடம் திட்டாதீர்கள் என்று சொன்னதற்கு வீட்டிற்கு வெளியே எதிரி தாறுமாறாக பேசி என் மனைவியை அறைந்து என் மனைவியை இடுப்பில் மிதி மிதி என்று மிதித்ததாக தெரிவித்தார்.என் மனைவிக்கு இடுப்பில் பிளேட் வைக்கப்பட்டுள்ளது.என் மனைவியை நான் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.அங்கு ஊசிப்போட்டுவிட்டு என் மனைவியை 108 ஆம்புலன்சில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம்.

3)என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) என் வீட்டிற்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கும் ஒரே சுவர் என்றால் சரிதான்.ஆஜர் எதிரி குட்டிராஜின் மகள் குளிக்கும்போது என் பேரன் அஸ்வின் செல்போனில் போட்டோ எடுத்ததாக காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எங்களிடம் எதுவும் விசாரிக்கவில்லை.புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது.

2)எதிரி என் பேரன் செல்போனில் படம் எடுத்ததாக தான் சத்தம் போட்டார் என்றால் என் பேரனிடம் செல் கிடையாது அப்போதும் செல் கிடையாது.சம்பவ காலத்தில் என் பேரன் அவரது அம்மாவின் செல்போனை கேம் விளையாடுவதற்காக வாங்கி செல்வார் என்றால் சரிதான்.சம்பவ காலத்தில் என் பேரன் செல்போனில் புகைப்படம் எடுத்தார் என்று எதிரி தரப்பிலும் என் பேரன் கேம் விளையாடினார் என்று எங்கள் தரப்பிலும் பேசினோம் என்றால் இல்லை.

3)சம்பவ காலத்தில் என்ன பிரச்சனைக்காக இந்த சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது.சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் செல்லவில்லை நேரடியாக ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு தான் சென்றோம்.போலிசார் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு 5,6 நாட்கள் கழித்து வந்தார்கள்.சம்பவத்தை பற்றி என்னிடம் தான் போலிசார் விசாரித்தார்கள் நான் தான் சொன்னேன்.நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள்.

4)போலிசார் எழுதியதில் நான் கையொப்பம் செய்தேன்.அசாஆவணம் 1றினை போலிசார் எழுதினார்.எந்த போலிசார் எழுதினார் என்றால் அது பற்றி தெரியாது.மருத்துவமனையில் வைத்து எழுதினார்.அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.எழுதியதில் நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு ஊரில் பெரியவர்கள் வைத்து பேசினோமா என்றால் இல்லை.

5)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் உண்டு என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் யார் யார் இருந்தார்கள் யார் யார் சண்டை போட்டார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.என் பேரன் தான் எதிரியின்

மகள் குளிக்கும்போது புகைப்படம் எடுத்துள்ளார் என்றால் அதற்கு தான் எதிரி சத்தம் போட்டார் என்றாலும் எதிரி எங்கள் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று நினைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.வழக்கு சம்பவத்திற்கு முன்பாக என் மனைவி கீழே விழுந்து கால் உடைந்திருந்தது என்றால் இல்லை.என் மனைவி இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதை மறைத்து மேற்படி காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.